Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 28, 2023

திங்கட்கிழமை ஓகஸ்ட் 28, 2023 | ஒளி: 09 கதிர் 071 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | FREE



## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் நடவடிக்கைகளுக்காக இன்றையதினம் (28) திறக்கப்படவுள்ளாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இன்றையதினம் ஆரம்பமாகவுள்ள இரண்டாம் தவணையின் இரண்டாம் கட்டம் ஒக்டோபர் 27 ஆம் திகதி வரை இடம்பெறும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஒரே சூலில் யாழில் மூன்று குழந்தைகள்

■ புகஜிந்தன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒரே தடவையில் மூன்று குழந்தைகள் ஞாயிற்றுக்கிழமை (27) சுகப்பிரசவமாக பிறந்துள்ளது.

மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் அப்புத்துரை சிறிதரன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் குறித்த சுகப்பிரசவத்தை மேற்கொண்டனர்.

தொடர்ச்சி P2



# 2024 பட்ஜெட் சவாலானது

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் திங்கட்கிழமை முதல் மீளாய்வு செய்யப்படும் என்றும் ஒக்டோபர் மாதம் பட்ஜெட்டின் முதல் வாசிப்பு எதிர்பார்க்கப்படுவதாக அறியமுடிகிறது.

நவம்பர் மாதத்தில், நிதி, பொருளாதார விவகாரங்கள் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வரவு செலவுத் திட்ட உரை நிகழ்த்தப்படவுள்ளது.

இந்நிலையில், அடுத்த ஆண்டுக்காக மற்றுமொரு சவாலான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த வருட நெருக்கடியிலிருந்து நாடு இன்னும் மெதுவாக மீண்டு வருவதாகவும் எனவே 2024 ஆம் ஆண்டுக்கான பாரம்பரிய வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியாது எனவும்அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் நாட்டை முழுமையாக வங்குரோத்து நிலையிலிருந்து வெளியேற்றுவதற்கு பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் முன்மொழிவுகள் உள்ளடக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

முல்லையில் காணிகள்

## மனிதர்களுக்கும் மாடுகளுக்கும் இல்லை

### திணைக்களங்களின் வசம் என்கிறார் ரவிகரன்

■ விஜயரத்தினம் சரவணன்



முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் ஆளுகையிலேயே மிக அதிகளவிலான நிலப்பரப்புக் காணப்படுவதாகவும் 3,389 குடும்பங்கள் குடியிருக்க காணியில்லாத நிலையில் வாழ்வதாகவும், 89 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கும் மேச்சல் தரையில்லை எனவும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## கண்டிக்கு 31 வரை விடுமுறை

கண்டி நகர எல்லைக்கு உட்பட்ட அனைத்து அரச பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 28,29 மற்றும் 31ஆம் திகதிகளில் விடுமுறை வழங்கப்படும் என்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே அறிவித்துள்ளார்.

எசல பெரஹெரவினால் கண்டி நகரில் ஏற்படும் கடும் வாகன நெரிசலைக் கருத்திற் கொண்டே இந்த இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் காலப்பகுதியில் நடைபெறாத கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்தி ஈடுசெய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



இன, மதவாதங்களை தூண்டி

## மக்களை ஏமாற்ற தயாராகின்றனர்

### அரசியலில் சூதாடுகிறது அரசாங்கம்

இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டி 2019 ஆம் ஆண்டைப் போன்று மீண்டும் மக்களை ஏமாற்றத் தயாராகி வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசதெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தேர்தலை ஒத்திவைத்து அரசியல் சூதாட்டத்தில் ஈடுபட்டு தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான திட்டங்களை வகுத்து வருவதாகவும்

தொடர்ச்சி P2

## தொழிற்கல்வி பாடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் தொழிற்கல்வி பாடங்களுக்காக மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பெறுபேறுகள் இந்த தெரிவின் போது கருத்திற் கொள்ளப்பட




மாட்டாது என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

18 மாவட்டங்களில் கடும் வரட்சி

## 85 ஆயிரம் குடும்பங்களுக்கு குடிநீர் பெறுவதில் சிக்கல்

நாட்டில் நிலவும் வரட்சியினால் 18 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 85 ஆயிரம் குடும்பங்கள் தற்போது பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் 291,715 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

ஜூலை மாதத்துக்கான

## அஸ்வெசும கொடுப்பனவு இன்று முதல் கிடைக்கும்

அஸ்வெசும நலன்புரி உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஜூலை மாதத்துக்கான கொடுப்பனவுகள் திங்கட்கிழமை (28) முதல் வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

8 இலட்சம் பயனாளிகளின் தகவல்கள் ஏற்கெனவே மதிப்பாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு கொடுப்பனவுகள் வரவு வைக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## ஏல மாம்பழம் ரூ.162 ஆயிரம்

■ க. அகரன்

வவுனியா உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ திருவிழாவின் போது மாம்பழம் ஒன்று 162 ஆயிரம் ரூபாய்க்கு ஏலத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ உற்சவத்தின் 06ம் நாள் மாம்பழ திருவிழாவான சனிக்கிழமை (26) மாலை விநாயகருக்கு

தொடர்ச்சி P2

ஜனாதிபதி தலைமையிலான

## அரசாங்கத்துக்கு கூட்டாக அழுத்தம் கொடுக்க அழைப்பு

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

இலங்கையின் பொருளாதார நிலைப்படுத்தலுக்கு தேவையான ஜனநாயக கோட்பாடுகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துக்கு கூட்டாக அழுத்தம் கொடுப்பதற்கு இணையுமாறு "ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பு" அழைப்பு விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

கச்சதீவை மீட்டால்

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா?

■ பு.கஜிந்தன்



கச்சதீவை மீட்போம் என்று தமிழக மீனவ மக்களிடம் கூறும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் அண்ணாமலை ஆகியோர் இந்திய மீனவர் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்த முடியுமா என்று யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதி மகேஷ் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2



## சீன கப்பலுக்கு அனுமதி?

சீன வெளிவிவகார அமைச்சின் கோரிக்கைக்கு அமைய, சீன ஆய்வுக் கப்பலான 'ஷி யான் 6' இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீன ஆய்வுக் கப்பல் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைவதற்கும் நங்கூரம் இடுவதற்கும் இந்தியா கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வருகின்றது. இந்நிலையிலேயே இக்கப்பலுக்கான அனுமதியை இலங்கை வழங்கியுள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'ஷி யான் 6' எனும் சீன கடல் ஆய்வுக் கப்பல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு வரவுள்ளது.

தொடர்ச்சி P2

## 1 நுண்ணுயிர் கொல்லி மருந்து தற்காலிகமாக நிறுத்தம்

### 50 வகை மருந்துகள் இறக்குமதி செய்யப்படும்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஒருவர் கோ - அமொக்சிகிளேவ் எனப்படும் நுண்ணுயிர் கொல்லி மருந்து செலுத்தியதை தொடர்ந்து உயிரிழந்தை அடுத்து, குறித்த மருந்தின் பயன்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.



வெட்டுக் காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக வரக்காபொலயிலிருந்து வந்த 50 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்தமை குறித்து ஆராய்வதற்காக

தொடர்ச்சி P2



அலைபேசி பாவிக்கும் குழந்தைகள்

## பெற்றோரை எதிரிகளாக கருதும் அவலம் உருவாகும்

■ வி.ரி.சகாதேவராஜா

அலைபேசி பாவிக்கும் குழந்தைகள் மனநலம் குன்றி, பெற்றோரை எதிரிகளாக கருதும் அவலநிலை உருவாகும் என்றும் எனவே குழந்தைகளுக்கு கைப்பேசியை வழங்காதீர்கள் என்றும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இரண்டு வங்கிகளை முன்மொழிந்தார் நாமல்

அரச மற்றும் தனியார் பங்காளித்துவத்துடன் இரண்டு வங்கிகளை அமைக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முன்மொழிந்தார்.

பொரளையில் சனிக்கிழமை (26) நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்தின் போது உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.



முதலீட்டு வங்கி ஒன்றையும் அபிவிருத்தி வங்கி ஒன்றையும் அமைக்க வேண்டும் என்றும் பெரிய, சிறு மற்றும் நடுத்தர வணிகர்களின் நலன்களுக்கு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஒரே சூலில்...

குறித்த மூன்று குழந்தைகளும் நலமாக பிறந்துள்ளதுடன் தாயும் குழந்தைகளும் நலமாக உள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## மனிதர்களுக்கும் மாடுகளுக்கும்...

நீண்ட காலமாக மேச்சல்தரைக்கான கோரிக்கை முன்வைக்கப்படுகின்றபோதிலும் இதுவரையில் மேச்சல்தரைக்குரிய காணிகள் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் 3,389 குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு நிலம் இல்லை. தொழில் முயற்சிக்கென 28,626 இளஞர், யுவதிகள் ஒரு ஏக்கர்வீதம் தமக்குக் காணி தருமாறு மாவட்ட செயலகத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளபோதிலும் அதற்கு சாதகமான பதில்கள் இல்லை.

முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புள்ளிவிபரத்தின் அடிப்படையில், மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பானது 2,415 சதுரகிலோமீற்றர் தரையாகவும், 202 சதுரகிலோ மீற்றர் உள்ளக நீர்ப் பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

இதில் கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் 222, 006 ஏக்கர், 36.72சதவீதமான நிலம் வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டுக் காணப்பட்டது.

இந் நிலையில் கடந்த 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் 167,484 ஏக்கர், 30.37நிலப்பரப்பை வனவளத் திணைக்களம் மேலதிகமாக தனது ஆளுகையின் கீழ் கொண்டுவந்துள்ளது.

தற்போது காடுபேணல் சட்டத்தின்கீழ் ஒதுக்கக்காடுகளாக மீண்டும் 42,631 ஏக்கர் 7.15சதவீதமான நிலப்பரப்பை வனவளத்திணைக்களம் கோரியுள்ளது. அவ்வாறு குறித்த நிலப்பரப்பும் வனவளத் திணைக்களத்தினால் உள்வாங்கப்பட்டால் மொத்தமாக உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலப்பரப்பில் 74.24 சதவீதமான நிலப்பரப்பு வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குள் உள்வாங்கப்பட்டுவிடும்.

மிகுதி நிலப்பரப்பில் பெரும்பகுதியை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கனியமணல் திணைக்களம், படையினர் உள்ளிட்ட தரப்பினர் ஆளுகை செய்கின்றனர்.

குறிப்பாக வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நிலப்பரப்பில், மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைக்காக சுமார் 50,000 ஏக்கர் காணி தேவையெனவும், விடுவித்துத் தருமாறு மாவட்டசெயலகம் கோரிக்கை விடுத்துள்ளபோதிலும் முறையான பதில்கள் இதுவரையில் கிடைக்கவில்லைஎனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் வேறு திணைக்களங்கள் காணிக் கோரிக்கை முன்வைக்கும்போதும், குடியேற்றங்களுக்காக காணிக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றபோதும் காணிகளை விடுவிக்கின்ற நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது" என்றார்.

## I நுண்ணுயிர்...

> **விநியோகத் துறையில் 230 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில், அந்த மருந்துகள் அனைத்தும் உடனடியாக இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது**

நியமிக்கப்பட்ட நிபுணர் குழு மூலமாகவும் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த 21 ஆயிரம் தடுப்பூசிகளை கொண்ட மருந்து தொகுதியிலிருந்து 18 ஆயிரம் தடுப்பூசிகள் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அவற்றில் ஒரு தடுப்பூசி தொடர்பில் மாத்திரமே இந்நிலை பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நாட்டில் தட்டுப்பாடு நிலவும் மேலும் 50 வகையான மருந்துகள் எதிர்வரும் 2 வாரங்களுக்குள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது மருத்துவ விநியோகத் துறையில் 230 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில், அந்த மருந்துகள் அனைத்தும் உடனடியாக இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்திய கடன் உதவியின் கீழ் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

## தொழிற்கல்வி...

தொழிற்கல்வி கற்கைநெறி முன்னெடுக்கப்படும் 525 பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை அதிபர்கள் ஊடாக அனுப்ப முடியும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி தொழிற்கல்வி பாடத்திட்டத்தின் கீழ் 12 ஆம் தரத்தில் பாடசாலை கல்வியை நிறைவு செய்து 13 ஆம் தரத்தில் தொழிற்கல்வி தொடர்பான பாடங்களின் கீழ் என்.வி.கியூ நான்காம் நிலை தொழிற்பயிற்சி நெறியொன்றை நிறைவுசெய்ய முடியும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறுவர் உளவியல் மற்றும் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் ஆய்வுகள், வாகன இயந்திர தொழில்நுட்பவியல் மற்றும் ஆடை வடிவமைப்பு உள்ளிட்ட இருபது பாடங்கள் இந்தத் தொழிற்கல்வியில் சேர்க்கப்பட்டுள்ளன.

13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வியை வழங்கும் நோக்கில் இந்த தொழிற்கல்வி நடைமுறைப்படுத்த ப்படுவதுடன், இது தொடர்பான விண்ணப்பங்களை உரிய பாடசாலைகளின் அதிபருக்கு அனுப்பிவைக்குமாறும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## ஏல மாம்பழம்...

படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று கோவில் வளர்ச்சி நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டது.

இதன்போது, பலத்த போட்டிக்கு மத்தியில் வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வசிக்கும் ச.சிந்துஜா என்பவர், 162 ரூபாய்க்கு குறித்த மாம்பழத்தை ஏலத்தில் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்களை ஏமாற்ற...

> **ஒரு முட்டாள் கூட்டம் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை பேசி,பேச்சுக்களில் குறுக்கிட்டு மக்கள் பிரச்சினைகளை மூடிமறைக்க முயற்சிக்கின்றனர்**

தொடம்கஸ்லந்த ஸ்ரீ சைலத்தலாராம விகாரையில் தூபியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் சனிக்கிழமை (26) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் மதங்கள் மற்றும் இனங்களுக்கு இடையே பூசல்கள் உருவாக்கப்படுகின்றன என்றும், வெவ்வேறு புவியியல் அதிகார வரம்புகளில் வாழும் மக்களின் சாதி மற்றும் மதத்தைப் பற்றி பேசி இந்த சர்ச்சைகளை அரசியல்வாதிகளே உருவாக்குகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

அதன் மூலம் வாக்குகளைப் பெறவே எதிர்பார்க்கின்றனர் என்றும், வெவ்வேறு பகுதிகளில் உள்ள வெவ்வேறு நபர்களிடம் 13 குறித்து சிலரிடம் விருப்பம் என்றும் மற்றும் சிலரிடம் விருப்பமில்லை என்றும் ஜனாதிபதி கனவுகளை கொண்ட இவர்கள் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

இந்த அரசியல் தலைவர்கள் சரியான குணாதிசயங்களில் இல்லாமல் அதிகாரத்தை பெற்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவியை பெற முயற்சிக்கின்றனர் என்றும், தமது சுகபோக வாழ்க்கை பாதிக்கப்படும் என்பதற்காக 220 இலட்சம் மக்களின் வாழ்க்கை எப்படி போனாலும் பரவாயில்லை என்ற போக்கில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சியை தக்க வைக்க முயற்சிக்கின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

மதங்கள் இனங்களுக்கிடையில் நல்லிணக்கமும் ஒற்றுமையும் நிலவினால்தான் நாட்டின் ஒருமைப்பாடு, பிரதேச ஒருமைப்பாடு, பலம், இறைமை, எமது தேசியம் எமது வாழ்வியல் பாதுகாக்கப்படும் என்றும், எனவே இன, மத, சாதி முரண்பாடுகள் ஏற்படும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் செயற்படாது என்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, கருத்தடை அறுவை சிகிச்சை செய்ததாக வைத்தியர் சாபிக்கு பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து இனப் பிளவைக் கிளப்பினர் என்றும், இறுதியில்,வைத்தியர் சாபி சரியானவர் என்று நிரூபனமானது என்றும் குறிப்பிட்டார்.

எனவே சம்புத்த சாசனத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் அனைத்து இன,மத,இன மக்களுக்கும் இடையிலான பிணைப்பு பலப்படுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சுப் பதவிகளில் கொண்ட பேராசையால் சிலர் நாட்டை துண்டு துண்டாக பிரித்து வருகின்றனர் என்றும், இது தேசப்பற்று அல்ல என்றும், கடந்த காலங்களில் இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டி அதிகாரத்தைப் பெற்றவரை மக்களே விரட்டியடித்தனர் என்றும் படித்தவர்களையும் அறிவாளிகளையும் இணைத்துக் கொண்டு இந்நாட்டைக் கட்டியெழுப்பப் பங்களிப்பதை தான் பின்பற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் பிரச்சனைகளை பேச பாராளுமன்றத்திற்கு செல்லும் போது பாராளுமன்றத்தில் ஒரு முட்டாள் கூட்டம் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை பேசி,பேச்சுக்களில் குறுக்கிட்டு மக்கள் பிரச்சினைகளை மூடிமறைக்க முயற்சிக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறைப் பேராசிரியரான வசந்த அத்துகோரலவின் ஆய்வின் பிரகாரம், இந்நாட்டின் 15 மாவட்டங்களில் உள்ள மக்கள் தண்ணீர் பற்றாக்குறையால் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

இதனால் அம்மக்கள் 10 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் தங்க ஆபரணங்களை அடகு வைத்துள்ளனர் என்றும், பயிர் சேதத்தால் 60 ஆயிரம் ஏக்கர் நாசமாகியுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், இதனால் 68729 கோடி தங்கம், நகைகள் ஆபரணங்கள் அடமானம் வைக்கப்பட்டுள்ளன என்றார்.

என்றும்,இப்பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் தீர்வு இல்லை என்றும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு மத்தியில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தேர்தலை ஒத்திவைத்து அரசியல் சூதாட்டத்தில் ஈடுபட்டு தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான திட்டங்களை வகுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

## 85 ஆயிரம்...

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா, மாத்தளை, கண்டி, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களே பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த மாவட்டங்களில், 84,643 குடும்பங்கள் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சங்கானைப் பகுதி ஜூன் மாதத்திலிருந்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை போதிய மழை பெய்யாது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## அரசாங்கத்துக்கு கூட்டாக...

இந்தக் கூட்டம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமது கூட்டமைப்பை தலைவர்கள், ஜனநாயகத்தை மதிக்கும் சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள், தொழில்வாண்மையாளர்கள், கல்வியியலாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், இளம் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற பல்வேறு வகையான சமூக அழுத்தக் குழுக்களின் செயற்பாட்டாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அழைப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 2022ம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நாட்டின் அரசியல் தலைமைகள் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான காலத்தில் மேற்கொண்ட பலவீனமான ஆட்சியின் பெறுபேறாகும்.

பொருளாதாரத்துக்கு மீண்டும் உயிரூட்டும் செயற்பாடு உண்மையாகவும், நியாயமாகவும் இடம்பெறவேண்டுமாயின், அரசு நல்லாட்சியை உறுதிப்படுத்தி, ஜனநாயக கோட்பாடுகளுக்கும் பிரஜைகளின் உரிமைகளுக்கும் மதிப்பளித்தல், ஊழலுக்கு எதிராக செயற்படுதல், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறலுடன் பணியாற்றுதல் என்பன அவசியமாகும்.

அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் நாட்டின் பொது நலன்கருதி முன்னெடுக்க வேண்டுமென அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவும், அதற்கான எமது கலந்துரையாடல்கள் மற்றும் செயற்திட்டங்களை மேலும் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் இந்த சந்தர்ப்பத்தில் கூட்டிணைவு பெரிதும் பங்களிப்புச் செலுத்தும் என்பது எமது நம்பிக்கையாகும்.

பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவந்து அடிப்படை ஜனநாயக கோட்பாடுகளை மதிக்கும், மிகவும் சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்பும்போது, இருக்க வேண்டிய ஜனநாயக உரிமைகளையும் கட்டமைப்புகளையும் பாதுகாப்பதற்காக ஜனாதிபதி தலைமையிலான அரசுக்கு கூட்டாக அழுத்தம் கொடுப்பதற்காக எம்முடன் இணைந்து கொள்ளுமாறு உங்களை அழைக்கின்றோம்.

ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பு சார்பில் பப்ரெல், தேசிய சமாதானப் பேரவை, சர்வோதய தேசோதய, சைல்ட் விஷன் உள்ளிட்ட 10 தேசிய தன்னார்வ அமைப்புக்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தரத்திலுள்ளோர் இந்த அழைப்பை விடுத்துள்ளனர்.

## சீன கப்பலுக்கு...

இந்த சர்ச்சைக்குரிய சீன கடல் ஆய்வுக் கப்பல் இலங்கையின் நாரா நிறுவனத்துடன் இணைந்து அறிவியல் பயணத்திற்குத் தயாராகி வருவதாகவும், தென்னிந்தியப் பெருங்கடல் பகுதி மற்றும் பொருளாதார வலயம் உள்ளிட்டவற்றை உள்ளடக்கி விரிவான ஆய்வை மேற்கொள்ளவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்த கப்பல் கொழும்பு துறைமுகம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகள்...

ஜூலை மாதம் 24 ஆம் திகதி ஆரம்பித்த 2ஆம் தவணையில் முதல் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஓகஸ்ட் 16ஆம் திகதியுடன் நிறைவடைந்ததுடன், கடந்த 17ஆம் திகதி பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கண்டிக்கு 31...

எதிர்வரும் 30ஆம் திகதி பூரணை தினம் என்பதால் திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரை தொடர்ச்சியாக 4 தினங்களுக்கு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அஸ்வெசும கொடுப்பனவு...

தெரிவு செய்யப்பட்ட 15 இலட்சம் பயனாளிகளில், தகவல் சரியாக உறுதி செய்யப்பட்ட 8 இலட்சம் பயனாளிகளுக்கு ஜூலை மாத கொடுப்பனவை சபை, வங்கிகளில் வரவு வைக்கும் என்றார்.

தகவலை உடனடியாக சரிபார்த்த பின்னர், மீதமுள்ள பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் தற்போது, மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான கணக்கெடுப்பு ஆரம்பித்துள்ளதாகவும் அவை நிறைவடைந்ததும் அனைத்து பயனாளிகளுக்கும் விரைவில் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

தவறான தகவல் கொடுத்து உதவித்தொகை பெற்ற பயனாளிகள் இருந்தால், அவை சரிபார்க்கப்பட்டு கொடுத்த பணத்தை மீட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்க சபை நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

## மீனவர் பிரச்சினைக்கு...

> **மு.க.ஸ்டாலின் மற்றும் அண்ணாமலை ஆகியோரிடம் ஒன்றை கேட்க விரும்புகிறேன் கச்ச தீவை இந்தியாக்கு வழங்கி விட்டால் வடபகுதி கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்த முடியுமா?**

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய பிரச்சனை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்ற நிலையில் வடபகுதி மீனவர்கள் தினமும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை இந்தியா மீனவர்களின் அத்துமறிய இழுவைமடித் தொழிலை நிறுத்துமாறு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு கலைத்து விட்டோம்.

மு.க.ஸ்டாலின் மற்றும் அண்ணாமலை ஆகியோரிடம் ஒன்றை கேட்க விரும்புகிறேன் கச்ச தீவை இந்தியாக்கு வழங்கி விட்டால் வடபகுதி கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்த முடியுமா?

கச்சதீவு எங்களிடம் இருக்கின்ற போது காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் குதிரை முனை மற்றும் திருகோணமலை வரை இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கச்சதீவில் நிரந்தரமாக இந்திய மீனவர்களை தங்க விட்டால் இலங்கையின் முழுக் கடலையும் நாசப்படுத்தி மீனவ மக்களின் வாழ்க்கையை சீரழித்து விடுவார்கள்.

உலக மீன் ஏற்றுமதியில் இந்தியா இரண்டாவது இடத்தில் இருக்கின்ற நிலையில் எமது இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிய மீன்பிடியினால் 30 சதவீதமான மீன்களை அள்ளிச்செல்கிறார்கள்.

ஆகவே சந்திரனுக்கு விண்கலத்தை அனுப்பிய இந்தியா, இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதற்கு இயலாமல் இருப்பது கவலை அளிப்பதாக தெரிவித்தார்.

## இரண்டு வங்கிகளை...

சேவை செய்யும் இந்த இரண்டு வங்கிகளிலும் அரச மற்றும் தனியார் துறை இரண்டும் பங்குகளை வைத்திருக்க முடியும் என்றார்.

மாறிவரும் உலகின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இவை அமைக்கப்பட வேண்டும் எனவும் நீண்ட கால மற்றும் குறுகிய கால கடன்களை அபிவிருத்தி வங்கி வழங்க முடியும் என்ற அதே நேரத்தில் முதலீட்டு வங்கி வெளிநாடுகளில் முதலீடு செய்ய விரும்பும் இலங்கை தொழில்முனைவோருக்கு உதவ முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

## பெற்றோரை எதிரிகளாக...

> **குழந்தைகளின் எதிர்காலம் முற்றாக அழிந்துவிடும். எனவே குழந்தைகளுக்கு இயன்றவரை கையடக்க தொலைபேசியை வழங்குவதை பெற்றோர் தவிர்த்துக்கொள்ள வேண்டும்**

அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலய கொடையாளர் கௌரவிப்பு விழா பாடசாலை அதிபர் பொன் பாரதிதாசன் தலைமையில் சனிக்கிழமை (26) நடைபெற்றது.

கௌரவ அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா மற்றும் ஆசிரிய ஆலோசகர் பி.வி.குணரத்ன ஆகியோர் கலந்து சிறப்பித்த நிகழ்வில் மேலும் தெரிவித்த வலயக்கல்விப் பணிப்பாளர்,

"அலைபேசிகளால் எமது நிம்மதி குறைகிறது. குறிப்பாக குழந்தைகள் மத்தியில் தொலைபேசி மற்றும் இணையம் ஆகியவற்றின் அதிக பயன்பாடு காரணமாக குழந்தைகளுக்கு ஞாபக மறதி ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

குழந்தைகள் வெகுவாக இணையக் காணொளியில் விளையாட்டுகளுக்கு அடிமையாகின்றனர்.

இணையக் காணொளி விளையாட்டு போட்டிகளில் குழந்தைகள் தீவிரமாக அவதானம் செலுத்துதால் மனநல நோய்க்கு உள்ளாகின்றனர்.

இதனால் பிள்ளைகள் கல்வியில் தோல்வியடைந்து பெற்றோரை எதிரிகளாக நோக்குகின்றனர்.

இதனால் குழந்தைகளின் எதிர்காலம் முற்றாக அழிந்துவிடும். எனவே குழந்தைகளுக்கு இயன்றவரை கையடக்க தொலைபேசியை வழங்குவதை பெற்றோர் தவிர்த்துக்கொள்ள வேண்டும்" என்றார்.

# மயிலத்த மடு-மாதவனையில் நிரந்த பொலிஸ் சோதனை சாவடி

## ஐ.ஜி.பியிடம் சந்திரகாந்தன் கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்த மடு, மாதவனை போன்ற பிரதேசங்களில் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற அத்துமீறல்கள் அதனுடன் தொடர்புபட்ட பிணக்குகள் போன்றவற்றினை சரி செய்யும் முகமாக குறித்த பிரதேசத்தில் நிரந்தரமான பொலிஸ் சோதனைச் சாவடியினை மிக விரைவில் அமைப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன மற்றும் சிரேஷ்ட பிரதி



பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண ஆகியோரை கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் (பிள்ளையான்) சனிக்கிழமை (26) சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போதே மேற்படி விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் இணைந்ததாக மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடம்பெறக்கூடிய சட்டவிரோத மதுபான உற்பத்தி, போதைப்பொருள் கடத்தல், விற்பனை அவற்றுடன் தொடர்புபட்ட குற்றச்செயல்கள் போன்றவற்றை தடுப்பது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பொலிஸ் மா அதிபர், தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைவது குறைவாக இருப்பதாகவும் அவர்கள் தங்களது சமூகத்திற்கு சேவையாற்றும் வண்ணமாக பொலிஸ் சேவையில் இணைந்து பணியாற்ற வேண்டுமெனவும் அதனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.



## அன்பளிப்பு

புத்தளம் சமீரகம பாடசாலையின் ஆரம்பப் பிரிவுக்கான நூலகப் புத்தகங்களின் ஒரு தொகுதியினை அதிபர் எம். மிஹ்லாருக்கு சமூக ஆர்வலரும், ஆசிரியருமான எஸ்.ஆர்.எம். முஹ்சி வழங்கி வைத்தார்.

எம்.யூ.எம்.சனூன்

## தனியார் கல்வி நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அக்கரைப்பற்று பிரதேசத்தில், உரிய உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாத தனியார் கல்வி நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார் ஞாயிற்றுக்கிழமை (27) தெரிவித்தார்.

மாணவர்களின் நலன் கருதி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில், இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வளப்பற்றாக்குறையுடைய தனியார் கல்வி நிறுவனங்கள், மாணவர்களின் நலன் கருதி உரிய உட்கட்மைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல் போன்றவை மாநகர சபை மற்றும் சுகாதார பணிமனை போன்றவற்றினால் பரிசோதிக்கப்படும். இப்பரிசோதனையில் போதிய வசதிகளை வழங்காது நடாத்தப்படும் கல்வி நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார்.

தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு மாலை 6.00 மணிக்கு பின்னர் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தாமல் இருப்பதுடன் உயர் தர வகுப்பு மாணவர்களில் கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் கற்கும் மாணவர்களுக்கு மட்டும் பி.ப 7.00 மணிவரை வகுப்புக்களை நடாத்த முடியும்.

பெண் பிள்ளைகள் பாடசாலை சீருடையில் மாத்திரம் தனியார் வகுப்புக்களுக்கு வருதல், தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு பாடம் தொடர்பாக 8 மணித்தியாலங்கள் மாத்திரம் ஒதுக்கப்படுதல் வேண்டும்.

ஒரு மணித்தியாலயத்திற்கு அதி கூடிய கட்டணமாக ரூபாய் 60 அறவிடுதல் வேண்டும், மாநகர சபை மற்றும் சுகாதார பணிமனையினால் தர நிர்ணயத்திற்கு உட்பட்ட சொகுசு வசதிகளுடன் நடாத்தப்படும் தனியார் நிறுவனங்கள் மாத்திரம் ரூபாய் 70 வரை அறவிட முடியும்.

ஞாயிற்றுக்கிழமையில் 6-11 வரையான மாணவர்களுக்கு முழு விடுமுறை நாளாக அறிமுகப்படுத்தல். அரச சுற்று நிருபத்திற்கமைவாக இந்நாளில் அகதியா வகுப்புக்கள் நடாத்தப்படுவதுடன் விளையாட்டு பொழுதுபோக்கு மற்றும் மார்க்க விழுமியங்களுக்கு வழி வகுத்துக் கொடுத்தல் வேண்டும்.

எனவே, மேற்குறித்த தீர்மானங்கள் அனைத்தும் செப்டம்பர் மாதம் 01ம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

## மாணிக்கக்கல்லை தூக்கியவருக்கு வலை

லக்கல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவலதெனிய, எல்பிட்டியவில் அமைந்துள்ள மாணிக்கக்கல் அகழும் தளத்தில் இருந்து ஏழு கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்கக்கல்லை திருடியதாக கூறப்படும் நபரை கைது செய்ய மாத்தளை பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ள 62 வயதுடைய வர்த்தகர் இது தொடர்பில் மாத்தளை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாடு செய்த தொழிலதிபரின் மாணிக்கக்கல் அகழ்வு தளத்தில் கூலித் தொழிலாளியாக பணிபுரியும் நபரே மாணிக்கக்கல் அகழ்வின் போது கிடைத்த ஏழு கோடி பெறுமதியான மாணிக்கக்கல்லை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஏழு கோடி மதிப்பிலான மாணிக்கக்கல்லை திருடிச் சென்றவர் குறித்து இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

## மனைவியை குத்தி கொன்ற கணவனும் மரணம்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் தனது மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட கணவன் மரணமடைந்துள்ளார்.

திடீர் நோய்வாய்ப்பட்ட அவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே புதன்கிழமையன்று (23)உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.
வந்தாறுமூலையில் மனைவியை கடந்த ஏப்பிரல் மாதம் 13 ம் திகதி கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் தொடர்பாக 74 வயதுடைய அப்பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.
இந்த நிலையில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட அவர் சுகயீனம் காரணமாக மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 23 ம் திகதி புதன்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.
இவ்வாறு உயிரிழந்த 74 வயதுடைய வீரக்குட்டி தவராசாவின் உடல் பிரேத பரிசோதனையின் பின்னர் வெள்ளிக்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



## மதங்களுக்கிடையிலான ஒற்றுமையின்

# சக்தி வாய்ந்த சின்னம் மடு மாதா

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் ஆகியோரை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சனிக்கிழமை (26) சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் ஜூலி சங் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில் இந்த கலந்துரையாடலில் சமய நல்லிணக்கம் மற்றும் சகிப்புத்தன்மையை மேம்படுத்துவதில் மதத் தலைவர்களின் முக்கிய பங்கு குறித்து ஆராயப்பட்டது என தெரிவித்துள்ளார்.

அதைத் தொடர்ந்து வரலாற்று சிறப்புமிக்க மடு மாதா ஆலயத்திற்கு சென்றேன். இந்த புனித இடத்திற்கு என்னை வரவேற்றதற்கு நன்றி எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் பல நூற்றாண்டுகளாக மன்னாரில் மதங்களுக்கிடையிலான ஒற்றுமையின் சக்தி வாய்ந்த சின்னம் என்று மடு மாதா ஆலயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் ஆயரை மன்னார் ஆயர் இல்லத்திலும் மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் மற்றும் மடு திருத்தலத்தின் புதிய பரிபாலகர் எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் ஆகியோரை மடு திருத்தலத்திலும் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஜேம்ஸ் டேலரின் சிலைக்கு முன் பிரகடனம்

■ மொஹமட் ஆஸிக்

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆகி இருந்தாலும் இன்னும் அவர்களுக்கு உரிமைகள் எவையும் கிடைக்கவில்லை. தங்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான பிரகடனம் சனிக்கிழமை (26) செய்யப்பட்டது.

லூல்கந்துரை தோட்டத்தில் அமைந்துள்ள முதலாவது தேயிலை செய்கையை ஆரம்பித்த ஜேம்ஸ் டேலர் உருவச்சிலை முன்னிலையில் பிரகடனம் செய்யப்பட்டது. இதனை, மனித அபிவிருத்தி தாபனம் ஏற்பாடு செய்திருந்தது.

மனித அபிவிருத்தி தாபனத்தின் தலைவர் கலாநிதி பீ.பீ. சிவபிரகாசத்தின் தலைமையில் இவ் வைபவங்கள் இடம் பெற்றன.

தேயிலை தோட்டத்தை முதன் முதலாக ஆரம்பித்த லூல்கந்துர தோட்டத்தில் அமைந்துள்ள ஜேம்ஸ் டேலரின் உருவச்சிலைக்கு முன்பாக ஒன்று கூடிய நூற்றுக்கணக்கான மலையக மக்கள், 200 வருடங்களாக தமக்கு கிடைக்காத உரிமைகளை எதிர்வரும் 10 வருடங்களில் பெற்றுக் கொள்வதற்கான பிரகடனம் ஒன்றை செய்தனர். அதன் பின்னர் ஊர்வலம் ஒன்றையும் நடாத்தினர்.

## கத்தி முனையில் 20 பவுண் நகைகளை கொள்ளை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் சங்கிலியன் வீதியில் உள்ள வீடொன்றினுள் வீட்டின் ஓட்டினை கழற்றி உட்புகுந்த முகமூடி கொள்ளை கும்பல், கத்தி முனையில் 20 பவுண் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளது.

சங்கிலியன் வீதியில் உள்ள குறித்த வீட்டினுள் சனிக்கிழமை (26) நள்ளிரவு கூரையை பிரித்து உள்நுழைந்த மூவர் அடங்கிய கொள்ளை கும்பல், வீட்டில் இருந்தவர்களை கட்டி வைத்து வீட்டில் இருந்த 20 பவுண் நகைகளை கத்தி முனையில் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளாரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று தினங்களில் சுமார் ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்ட பகுதிகளில் மூவர் அடங்கிய முகமூடி கொள்ளை கும்பல் இரு கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதுடன் , ஓர் இடத்தில் கொள்ளையை கைவிட்டு தப்பியோடியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு கல்வியங்காடு பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றினுள் புகுந்த மூவர் அடங்கிய கொள்ளை கும்பல் அருட்தந்தையரை கத்தி முனையில் மிரட்டி , அவரின் 30 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் தேவாலய உண்டியலில் இருந்த 15 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளது.

திருநெல்வேலி பாற்பண்ணை பகுதியில் உள்ள வீடொன்றின் கூரையை வெள்ளிக்கிழமை நள்ளிரவு பிரித்து உள்நுழைந்த மூவர் அடங்கிய முகமூடி கொள்ளை கும்பல் வீட்டில் இருந்தவர்களை கட்டி வைத்து , கத்தி முனையில் கொள்ளையிட முயன்ற போது , வீட்டார் கூக்குரல் எழுப்பவே , அயலவர்கள் விழித்துக்கொண்டு , தமது வீட்டு மின் விளக்குகளை ஒளிர விட்டதை அடுத்து கொள்ளை கும்பல் தமது கொள்ளை முயற்சியை கைவிட்டு தப்பி சென்றது.

இந்நிலையில் சனிக்கிழமை நள்ளிரவு சங்கிலியன் வீதியில் உள்ள வீடொன்றினுள் கூரையை பிரித்து உள்நுழைந்த மூவர் அடங்கிய முகமூடி கொள்ளை கும்பல் 20 பவுண் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவம் இடம்பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாணத்திற்கு இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் , வெளிநாடுகளில் இருந்தும் பெருமளவானோர் வருகை தந்து தங்கி நின்று நல்லூர் ஆலயத்திற்கு சென்று வரும் நிலையில் , யாழ்ப்பாணத்தில் முகமூடி கொள்ளையர்களின் கொள்ளை சம்பவம் அதிகரித்து உள்ளமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



## சிறுபோக நெற்செய்கையும்

# நீரின்றி கருகியது

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

மல்லாவி குளத்தில் தண்ணீர் இல்லாததால் சிறுபோக நெற்செய்கை முழுமையாக நீரின்றி கருகிய நிலையிலும் அழிவடைந்தும் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்கு உட்பட்ட வவுணிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள மல்லாவிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 42 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ளன. இந்த நிலையில் மேற்படி குளத்தில் தண்ணீர் இல்லாததால் சிறுபோக நெற்செய்கை முழுமையாக நீரின்றி கருகிய நிலையிலும் அழிவடைந்தும் காணப்படுகிறன.
இதில் குறிப்பிட்ட சில விவசாயிகள் வேறு பிரதேசங்களில் இருந்து தண்ணீர் பௌசர்களின் தண்ணீர் கொண்டு வந்து தமது வயலை பாதுகாத்துக் கொள்வதற்காக முயற்சிகளை செய்து வருகின்றனர்.
இதனால் நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் குளத்தில் முழுமையாக நீர் வற்றியதால் நன்னீர் மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# மூன்று மாணவிகள் வெற்றி

■ நடராசா கிருஸ்ணகுமார்





கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலயத்தின் மூன்று மாணவிகள் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளனர்.
கிளிநொச்சி தெற்கு வலயத்தில் வெள்ளிக்கிழமை (25) இடம் பெற்ற பூநகரி கோட்ட மட்ட விவசாய வினாடி வினா போட்டியில் இப் பாடசாலை மாணவர்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்று தமது திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர். பு.புகழினி - 1 இடம், கே.சருஷ்ரிகா - 2 இடம், சு.பரணிகா - 3 இடம் ஆகிய இடங்களைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

## வர்த்தக பிரிவில் வவுனியா இறுதி இடம்

■ க. அகரன்

உயர்தர பரீட்சையில் வர்த்தக பிரிவில், வவுனியா மாவட்டம் 25 ஆவது மாவட்டமாக இறுதி இடத்தை பெற்று வருகின்றமை தொடர்பில் கல்வித்திணைக்கள அதிகாரிகளும் வட மாகாண கல்வித்திணைக்களமும் மாணவர் முன்னேற்ற திட்டம் தொடர்பில் ஆராய வேண்டும் என கல்வியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

2018 ஆம் ஆண்டிற்கு முன் உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வர்த்தக பிரிவில் முன்னிலையில் காணப்பட்ட வவுனியா மாவட்டம் கடந்த சில ஆண்டுகளாக பின்னோக்கி மாவட்ட அடிப்படையில் 25 ஆவது மாவட்டமாக இறுதி நிலையில் காணப்படுகின்றமை பாரிய சவாலாக மாறியுள்ளது.

# ஓங்கும் கடும்தொனிக்கு ஒதுங்கி மௌனம் காப்பது ஏன்?

சிங்கள- பௌத்த உரிமையை பாதுகாக்க வேண்டும் என்ற கோஷம் அண்மைய காலங்களில் கொஞ்சம் சத்தமாகவே கேட்கத் தொடங்கியுள்ளது. அந்தளவுக்கு அந்த உரிமைக்குத் தீங்கிழைப்பவர்கள் யார்? அல்லது அச்சுறுத்துவோர் எந்த சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

ஒரு நாட்டில், பெரும்பான்மையாக வாழும் இனமொன்றை சேர்ந்தவர்களே ஆட்சியாளர்களாகவும், தீர்மானங்களை எட்டும் தரப்பாகவும் இருப்பர். முக்கிய உயர் பதவிகளையும் வகிப்பர், ஏனைய சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த சமூகம், உரிமையை கேட்டுப்பெறவும் கிடைப்பதை காப்பாற்றிக்கொள்ளவுமே பாடுபடும். இது உலக நியதி.

எனினும்,எமது நாட்டில் பெரும்பான்மையாக வாழும் பௌத்த- சிங்கள மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுக்க போராட்டங்களை நடத்திவருவது ஏன் என்பது தெளிவில்லை. சிறுபான்மை இனங்களின் மீது தங்களுடைய இளம் சமூகத்தினருக்கு வெறுப்புணர்வை ஊட்டும் செயற்பாடாக இருக்குமோ? என்றொரு சந்தேகம் கிளம்பியுள்ளது.

அரகலயவின்போது, ஆட்சியாளர்களின் வீடுகள் பல தீயிட்டு கொளுத்தப்பட்டன. அப்போதெல்லாம் வாயைத்திறக்காது மௌனித்திருந்த உதய கம்பன்பில, தமிழ் எம்.பிக்களின் வீடுகளுக்கு முன்பாக போராட்டம் நடத்தவேண்டுமென தொனியை உயர்த்தினார்.

அதன்பின்னர், உதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு முன்பாக, பௌத்த தேரருடன் சென்றிருந்த குழுவினர், இரண்டு நாட்கள் போராட்டம் நடத்தினர்.

பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என இலங்கை அரசியலமைப்பிலேயே தெட்டத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. பௌத்தைத்தை சிங்களவர்களே பின்பற்றுகின்றனர். அப்படியாயின், யார் இழுக்கை ஏற்படுத்த முயலுகின்றனர்.

மொழியியலில் தொனி என்பது ஒரு சொல்லின் பொருளை மாற்றுவதற்கு வெவ்வேறு சுருதிகளுடன் உச்சரிப்பதை குறிக்கும். அரசியல்வாதிகளின் உச்சரிப்பு இரத்தத்தை சூடேற்றுவதாகவே அமைந்துள்ளது.

2023 எல்பிஎல் போட்டி ஆரம்பத்தின் போது, பாடகர் உமாரா சின்ஹவன்ச, தேசிய கீதத்தில் ஒருசொல்லை தொனி உயர்த்தி பாடியமைக்காக பல்வேறு எதிர்ப்புகள் கிளம்பின. இறுதியில் தன்னுடைய பிழையை ஏற்று மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

ஆனால், சிறுபான்மை இனங்களுக்கு எதிராக அரசியல்வாதிகள் தொனியை உயர்த்திய போது, நாட்டின் சட்டமும், ஏனைய தரப்பினரும் மௌனம் காத்தமை, காக்கின்றமை வெட்கித்தலைகுனிய வைக்கும் செயலாகும்.

தமிழர்களின் தலைகளைக் கொய்வேன் எனக்கூறிய முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராகம் தமிழ் எம்.பிகளின் வீடுகளை சூழ்வோம் என்றழைத்த உதய கம்பன்பிலவுக்கு எதிராகவும் சட்டம் தலைகுனிந்து நிற்கின்றது.

இதற்கிடையே, சரத் வீரசேகர தனக்கு கிடைத்திருக்கும் வரபிரசாதத்துக்குள் மறைந்துகொண்டு, பாராளுமன்றத்தில் தமிழர்களுக்கு எதிராகவும், தமிழ் நீதிபதி, நீதவான்களுக்கு எதிராகவும் அப்பட்டமாக குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றார்.

வன்முறைகளை தூண்டும் வகையில் பேசி உந்துதல் அளிக்கும் வெறுப்புப் பேச்சை பேசுவோருக்கு எதிராக, இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற் சென்று, எவ்விதமான தயவு தாட்சியமும் இன்றி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவே சட்டத்துக்கு மதிப்பாகும். என்பதே எமது வலியுறுத்தலாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தமிழ்த் தேசியமும், அதன் பொருளாதாரக் கொள்கையும்



என்.கே.அஷோக்பரன்

தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள், தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற மந்திரத்தை மூச்சுக்கு முந்நூறு தடவை உச்சரிக்கின்றன. தேசம், தேசியம் என்று நிறைய உணர்ச்சி பொங்கப் பேசுகின்றன. ஆனால் ஒரு தேசக்கட்டுமானத்தின் அடிப்படையான பொருளாதாரம் பற்றி அவை பெரிதும் பேசுவதில்லை. தமிழ்த் தேசியத்தின் மிகப்பெரும் பின்னடைவு இங்கிருந்துதான் தொடங்குகிறது.

தமிழ்த் தேசியம் "புரட்சிப் பாதையை" தேர்ந்தெடுத்தக்கொண்டதனால், இயல்பாகவே அது "இடதுசாரி", "மாக்ஸிஸப்" புரட்சி அடையாளங்களாக உலக அளவில் பரப்புரை செய்யப்படும் தரப்புகளாலும், அவர்களது "மாக்ஸிஸக்" கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டன என்பது யதார்த்தம். ஒரு "போராடும்" சமூகமாக தன்னை உருவாக்கிக்கொண்ட ஒரு மக்கள் கூட்டத்திற்கு, அதுவும், சமூக ரீதியான ஏற்றத்தாழ்வுகளை ஏலவே கொண்டிருந்த சமூகமொன்றிற்கு, ஒன்றுபட்ட போராட்டமொன்றை முன்னெடுக்க "சமத்துவம்" என்ற கொடி அவசியமாகிறது.

"சமத்துவம்" என்பது சமூகத்தை ஒன்று திரட்டவல்லதொரு கவர்ச்சியான அரசியல் ஆயுதம். அது தமிழ்த் தேசிய அரசியலுக்கு மிக அத்தியாவசியமானதாகியது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்தல் என்பதைவிட, சமூக ஏற்றத்தாழ்வுகள் தமிழ்ச் சமூகத்தை ஒன்றுதிரட்டுவதற்கு மிகப்பெரிய சவாலாக இருந்தமையினால், அதற்கு "சமத்துவம்" என்ற கோசம் அத்தியாவசியமானது. இந்த "சமத்துவம்" என்ற போர்வையில் "இடதுசாரித்துவமும்", "மாக்ஸிஸமும்" தமிழ்த் தேசியத்திற்குள் ஊடுருவிக் கொண்டது.

பொருாளதார ரீதியில் பின்னடைவான எந்த மக்கள் கூட்டமும், பலமான தேசமொன்றைக் கட்டியெழுப்ப முடியாது. சித்தாந்த ரீதியிலான விதண்டாவாதங்களை ஒரு புறமிருத்திவிட்டு, யதார்த்தப் பார்வையில் நோக்குனோமேயானால், "மாக்ஸிஸ" வழியில் சென்ற எந்தவொரு சமூகமும், மக்கட் கூட்டமும், தேசமும், நாடும் செழிப்படைந்த வரலாறே கிடையாது. ஆகவே இந்த இடத்தில் தமிழ்த் தேசிய அரசியல் தனது பொருளாதாரக் கொள்கையை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவையை உணரவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

தேசத்தைக் கட்டியெழுப்ப பல்வேறு பொருளாதார, அரசியல் மற்றும் சமூக காரணிகளைப் பற்றிய ஆழமான புரிதல் தேவைப்படுகிறது. இந்த காரணிகளில், சந்தை சக்திகள் - குறிப்பாக, தேவை மற்றும் வழங்கலின் இயக்கவியல் முக்கிய பங்கு வகிக்கிறது. "மாக்ஸிஸம்" போன்ற சில சித்தாந்தங்கள் கடந்த காலங்களில் பிரபலமடைந்திருந்தாலும், தேசத்தைக் கட்டியெழுப்புவதில் நிலையான வெற்றியை அடைவதில் அவை பெரும்பாலும் தோல்வியுற்றன .

தேவை என்பது பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான நுகர்வோரின் விருப்பங்களையும் தேவைகளையும் பிரதிபலிக்கிறது, அதே நேரத்தில் வழங்கல் அந்த பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவைக் குறிக்கிறது.

"மாக்ஸிஸம்", வளங்களின் கூட்டு உடைமை மற்றும் செல்வ மறுபகிர்வு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, பல பொருளாதார ரீதியில் பின்னடைந்துள்ள நாடுகளில் ஒரு கவர்ச்சியான சித்தாந்தமாக இருந்து வருகிறது. இருப்பினும், தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் இறுதியில் தோல்வியுற்ற "மாக்ஸிஸத்தினால்" ஈர்க்கப்பட்ட ஆட்சிகளின் உதாரணங்களால் உலக வரலாறு நிரம்பியுள்ளது.

மத்திய திட்டமிடல் பொருளாதாரம் பெரும்பாலும் வளங்களை திறமையாக ஒதுக்குவதில் தோல்வியடைவதால், "மாக்ஸிஸப்" பொருளாதாரங்கள் மாற்றமுடியாத திறமையின்மையால் பாதிக்கப்படுகின்றன. இது தேக்கம், குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளின் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. சோவியத் யூனியனும், வட கொரியாவும் "மாக்ஸிஸக்" கொள்கைகளின் கீழ் பொருளாதாரத் தேக்கத்தை அனுபவித்த நாடுகளுக்கு முதன்மையான உதாரணங்கள். சமமான செல்வப் பங்கீடு என்பதை மாக்ஸிஸம் முன்னிலைப்படுத்துவதானது, வேலை செய்வதற்கும் புதுமைப்படுத்துவதற்குமான தனிப்பட்ட ஊக்கங்களைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும். தனிப்பட்ட ஆதாயம் இல்லாமல், தனிநபர்கள் தங்கள் திறன்களையும் திறமைகளையும் தேசத்திற்கு பங்களிக்க குறைவாக உந்துதல் பெறுகிறார்கள். இதன் விளைவாக, ஒரு தேக்கநிலை, உற்பத்தியற்ற பணியாளர்கள் உள்ளனர். குறுங்காலத்தில் உணர்ச்சிப் பெருக்கினால் "தியாகங்கள்" செய்ய விளையும் மக்கட் கூட்டமொன்றை அதே மனநிலையில் நீண்டகாலம் தக்கவைத்திருக்க முடியாது. ஆகவேதான் மாக்ஸிஸம் தோற்றது, தோற்றுக்கொண்டிருக்கிறது.

வளங்களின் தவறான ஒதுக்கீடுக்கு வழிவகுக்கிறது, ஏனெனில் சந்தை சக்திகளால் (அதாவது கேள்வி, மற்றும் நிரம்பல்) வழிநடத்தப்படுவதை விட தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரால் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இது சில பொருட்களின் அதிக உற்பத்தி மற்றும் பிறவற்றின் குறைவான உற்பத்தி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தும்.

"மாக்ஸிஸ" ஆட்சிகள் தனிமனித சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் வரலாற்றைக் கொண்டுள்ளன, இது புதுமை மற்றும் படைப்பாற்றலைத் தடுக்கிறது. கருத்து வேறுபாடுகளை அடக்குவது, தேசத்தைக் கட்டியெழுப்புவதில் முக்கியமான பல்வேறு கண்ணோட்டங்கள் இல்லாததற்கு வழிவகுக்கும். ஹிட்லரைவிட அதிக மனிதப் படுகொலைகளைச் செய்தவர்கள் ஸ்டாலினும், மாவோவும். இந்த வரலாற்றைப் பற்றி இடதுசாரிகள் பேசுவதேயில்லை. மனித உரிமைகளை அடக்குவதில் நாஸிக்களுக்கும், மாக்ஸிஸவாதிகளுக்கும் பெரிய வித்தியாசமில்லை.

சந்தைப் பொருளாதாரம் அல்லது முதலாளித்துவம் தனிநபர்கள் மற்றும் வணிகங்களை அவர்களின் முயற்சிகளில் இருந்து நேரடியாக பயனடைய அனுமதிப்பதன் மூலம் புதுமைகளை உருவாக்கவும் திறமையாக செயல்படவும் ஊக்குவிக்கிறது. சந்தை சக்திகள் தானாக வளங்களை அவற்றின் அதிக உற்பத்திப் பயன்பாடுகளுக்கு ஒதுக்கி, வீணாதல் மற்றும் திறமையின்மையைக் குறைக்கின்றன. இது மிகவும் ஆற்றல்மிக்க மற்றும் மாற்றியமைக்கக்கூடிய பொருளாதாரத்திற்கு வழிவகுக்கிறது. முதலாளித்துவ சமூகங்கள் பொதுவாக தனிமனித சுதந்திரம் மற்றும் உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றன, படைப்பாற்றல் மற்றும் புதுமையின் சூழலை வளர்க்கின்றன. சிக்கலான தேசத்தைக் கட்டியெழுப்பும் சவால்களைத் தீர்ப்பதற்கு இந்த சிந்தனையின் பன்முகத்தன்மை இன்றியமையாதது. ஏனென்றால், முதலாளித்துவம் தளைக்க தனிமனித சுதந்திரம் அவசியம். தனிமனித சுதந்திரம் பறிக்கப்படும் போது, முதலாளித்துவம் தனது சாதக இயல்பை இழக்கத் தொடங்குகிறது. உள்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற பொதுப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய செல்வத்தை முதலாளித்துவம் உருவாக்குகிறது. ஒரு வலுவான தனியார் துறை வரி வருவாயை உருவாக்குகிறது, இது தேசத்தை கட்டியெழுப்புவதற்கான இந்த அத்தியாவசிய கூறுகளுக்கு நிதியளிக்க முடியும். எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தையே எதிர்பார்த்து, அரசாங்கத்தில் தங்கியிருக்கும் ஒரு மக்கட் கூட்டத்தை கட்டியெழுப்புவது தேசக்கட்டுமானமல்ல, தேச அழிப்பு! தேசங்களை அழிந்துபோகச் செய்யும் வழி அது. அரசு என்பது மக்களால் வளப்படுத்தப்படக்கூடியதாக இருக்க வேண்டும். அதற்கு மக்கள் வளமானவர்களாக மாறக்கூடிய சூழலும், வாய்ப்புக்களும் அந்த அரசில் இருக்க வேண்டும். சந்தைப் பொருளாதாரம் அதற்கான பொருத்தமான, நிரூபிக்கப்பட்ட வழி. "மாக்ஸிஸம்" அல்ல. உலகில் அதிகளவு எண்ணை வளமிருந்தும், அதிகளவு எண்ணை வளத்தை ஏற்றுமதி செய்தும் இன்னும் பொருளாதார ரீதியில் மிகப் பின்தங்கிய நாடாக வெனிசுவேலா இருக்கிறது என்பது சோசலிஸத்தின் உண்மை முகத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது!

சந்தை சக்திகளைப் புரிந்துகொள்வது, குறிப்பாக தேவை மற்றும் வழங்கலின் இயக்கவியலின் தேவையை உணர்வது, வெற்றிகரமான தேசத்தை கட்டியெழுப்புவதற்கு அவசியமாகும். "மாக்ஸிஸத்தால்" ஈர்க்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளின் வரலாற்றுத் தோல்விகள், மத்திய திட்டமிடல் மற்றும் செல்வ மறுபகிர்வு ஆகியவற்றின் குறைபாடுகளை அப்பட்டமாக பறைசாற்றுகின்றன. சந்தைப் பொருளாதாரம் அல்லது முதலாளித்துவம் அதன் சவால்கள் இல்லாமல் இல்லை என்றாலும், அது பொருளாதார வளர்ச்சி, புத்தாக்கம், மற்றும் செழிப்பு ஆகியவற்றை உந்தித் தள்ளும் திறனைத் தொடர்ந்து நிரூபித்துள்ளது. ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க விரும்பும் தேசங்களுக்கு, "மாக்ஸிஸத்தின்" கவர்ச்சிகரமான முகப்பிற்கு அப்பால் பார்க்க வேண்டியதும், நிரூபிக்கப்பட்ட முதலாளித்துவ வழிமுறைகளை நீண்டகால வெற்றிக்கான பாதையாக ஏற்றுக்கொள்வதும் கட்டாயமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

உரிமை என்பது தமக்கானது மட்டும் எனும் எண்ணம் ஆள்பவர்களுக்கு உருவாகிவிட்டது. அத்துடன் சுதந்திரமும் தங்களுக்கான சொத்து என வெளிப்படையாகக் காட்டுகின்றனர். நடத்தையில் நீதி, நியாயம் அறவே இல்லை.

தங்கள் செயல்களில் இறுமாப்பு அடைகின்றவர்கள், எதிர்காலத்தின் தாக்கங்களை உணர்வதே இல்லை. உலக மாற்றங்கள் இயல்பானவை. சர்வாதிகாரம் என்பது வெறும் புஷ்வாணம் ஆகும் என்பதை உணர்கின்றார்கள் இல்லை. மக்கள் பலம் பற்றி அறியாமல் இருப்பது வீழ்ச்சியைத் தரும்.

இத்தகையவர்கள் தங்களைத் தாங்களே இழக்கின்றார்கள். கற்பனையில் பல அரசாங்கங்கள் இயங்குகின்றன. மக்கள் குரல்கள் இவர்களுக்குக் கேட்கவில்லை என நடிக்கிறார்கள்.

எதுவும் நிரந்தரம் இல்லை. பொய்மை கருகிவிடும். கர்மா எவரையும் விட்டுவிடாது. கர்மா, செய்த தவறுகளுக்கு தண்டனை வழங்கும்.

இயற்கை நியதிகூட, 'கர்மா' என்பதில் ஐயம் இல்லை. ஆண்டவன், துட்டர்களை மன்னிப்பதும் இல்லை; மறப்பதும் இல்லை.

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### காட்டு யானைகளால் மக்கள் அச்சம்

மட்டக்களப்பு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்தில் காட்டுயானைகளின் தொல்லையால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

உன்னிச்சை கிராமத்துக்குள் இரவுவேளைகளில் புகும் காட்டு யானைகள் விவசாயிகளின் தென்னந்தோப்பினை அழித்து துவம்சம் செய்துள்ளன.

ஐந்து மற்றும் ஐந்துக்கும் மேற்பட்ட வருடங்களாக பராமரித்து வந்த தென்னைமரங்களையே காட்டு யானைகள் அழித்துள்ளதாக இவ்விவசாயிகள் தெரிவித்துள்ளர்.

அப்பிரதேசத்தில் யானை பாதுகாப்பு வேலி இருந்தும் காட்டுயானைகள் அதனையும் கடந்து கிராமங்களுக்குள் புகுந்து பயிர்களை அழிப்பதுடன் வீடுகளையும் உடைத்து சேதப்படுத்தி வருகின்றன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட ஒருசில குடும்பங்கள் இணைந்து யானைகளின் தாக்குதல்களில் இருந்து தமது உயிரையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்கு உதவுமாறு அரசாங்கததிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

வ.சக்திவேல்



திருகோணமலையில்

# மொழி ஊடாக நல்லிணக்கம்





ஹஸ்பர் ஏ ஹலீம்



திருகோணமலை மாவட்டத்தில் மூவினங்களை கொண்ட மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஊடகவியலாளர்கள்,ஊடக ஆர்வலர்களுக்கான மொழி கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டு பரஸ்பர ரீதியான சமூக நல்லிணக்கப் பயணமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் ஊடகர்களுக்கு சிங்கள மொழி கற்கையும்,சிங்களம் பேசுவோர்களுக்கு தமிழ் மொழி கற்கையும் நடாத்தப்பட்டுள்ளது. குறித்த பாடநெறிகளை திருகோணமலையில் உள்ள எழுத்தாணி அமைப்பு முற்று முழுதாக இலவசமாக வழங்கியுள்ளது. இதன் மூலம் இப் பயிற்சி 50 பேர்கள் 150 மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறியாக தொடரப்பட்டுள்ளது. இதன் மூலம் சமாதான நல்லிணக்க சக வாழ்வு உறுதிப்படுத்தப்படுவதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாக சிங்கள மொழி பேசுவோர் தமிழ் பேசும் வீட்டுக்கு ஒரு நல்லிணக்க பயணம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறான பாடநெறி மூலம் சக வாழ்வினை ஏற்படுத்தும் நோக்கில் கண்டிக்கு ஒரு நாள் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு அங்குள்ள தமிழ் ,சிங்கள மொழி ஊடகர்களை சந்தித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான பாடநெறி மூலம் புரிந்துணர்வினை மேம்படுத்தவும் இன மத கலாசார பண்புகளை புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் கிட்டியது. தமிழ் பேசும் ஊடகன் ஒரு சிங்கள மொழி சகோதரியின் வீட்டுக்கு இப் பாடநெறி மூலமாக களவிஜயம் மேற்கொண்டு இவ்வாறு அதனை பகிர்ந்து கொண்டார் " இந்த பாடநெறிக்கு வரும் முன் சிங்கள மொழி பேசவோ எழுதவோ தெரியாது. தற்போது ஓரளவேனும் பேச கூடிய வாய்ப்பு கிடைத்தது. இதன் மூலம் சிங்கள சகோதரியின் வீட்டுக்கு சென்ற வேளையில் அவர் என்னை மிகவும் ஆதரித்ததுடன் அவர்களது பௌத்த மதம், கலாசாரம் போன்றனவற்றை அறியக்கிடைத்ததுடன் முதற் தடவை தான் இவ்வாறு அவர்களது வீட்டுக்கு சென்று விருந்துபசாரங்களிலும் ஈடுபட்டேன். மிக்க சந்தோசமான இந்த பயணம் ஒரு விசேடமான அனுபவத்தை தந்துள்ளது. நான் முஸ்லிமாக இருந்தாலும் அவர்களது பாரம்பரிய உணவு முறைகள் போன்றன பற்றி கற்க கூடிய வாய்ப்பும் கிட்டியது. அவர்களது பௌத்த விகாரைக்கு சென்றதுடன் அவர்களது வணக்க வழிபாடுகளை அறியக்கூடிய வாய்ப்பும் இந்த பயணம் மூலம் கிட்டியது"

தமிழ், சிங்கள மக்களினது ஒற்றுமையில் விரிசல் ஏற்பட மொழி ஒரு காரணமாக உள்ளது. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்கள் சிங்களம் பேசுவது குறைவு இது போன்று கண்டிக்கு சென்ற ஊடகர்களினது அனுபவப் பகிர்வு மூலமாக நல்ல பல சமூக நல்லிணக்கத்தை கற்க கூடிய வாய்ப்பும் சிங்கள மொழி பாட நெறியால் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாக பார்க்கப்படுகிறது.

மொழி என்பது இந்த நாட்டில் கட்டாயமானது. அதுபோலவே சிங்கள, தமிழ் மொழி அரச கரும மொழியாக காணப்படுவதுடன் உரிமைகளில் ஒன்றாகவும் காணப்படுகிறது. தமிழ், சிங்கள பாடநெறி இரு வகுப்புக்களை ஒன்றாக வைத்து இடம் பெறும் போது குழு கலந்துரையாடல் மூலமாக நல்லிணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாக காணப்படுகிறது. பெரும்பான்மை இன சமூகம் சிறுபான்மை மூலமான சமூகத்துடன் ஒற்றுமையாக வாழ இந்த பாடநெறி எமக்கு பாரிய வழிகாட்டியாக உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரமே மூவினத்தையும் சேர்ந்த ஒரு ஊடக சங்கம் திறம்பட செயற்பட்டு வருகிறது. ஒரு சமூகத்தின் கலை கலாசார பாரம்பரியம் மற்றும் அதன் மூலமான சக வாழ்வு நல்லிணக்கமும் தோன்றுகிறது. குறித்த சமூக வெளிப்பாடு மூலமாக அனைவரும் ஒன்றாய் புரிந்துணர்வுடன் வாழக்கூடிய நிலை இதன் மூலம் கட்டியெழுப்பப்படுகிறது. குறித்த பாடநெறி மூலமாக ஒரு நாள் கொண்ட கண்டி களவிஜயம் ஊடாக மாற்று மத சமூகத்தவரின் மொழித் துறை மூலமாக எங்களுக்குள் காணப்படும் சகவாழ்வினை புரியக்கூடியதான வாய்ப்பு கிட்டியது. ஏனைய அரச துறை உத்தியோகத்தர்களுக்கு வெறுமெனே பாடநெறி மாத்திரம் நடாத்தப்பட்டாலும் இது முற்றிலும் மாறுபட்டதான அனுபவப் பகிர்வை தந்துள்ளது.

சிங்கள பாட நெறியை பயில்வதன் மூலம் நாம் அவர்களுடன் அன்பாக பழகவும் இன நல்லிணக்கத்தை கற்றுக் கொள்ள கூடிய வாய்ப்பும் கிட்டுகிறது. இந்த பாடநெறி மூலம் சிங்கள மொழி பேசும் சக நண்பியான கான்சனா சிதுமினியின் வீட்டுக்கு சென்ற நண்பன் ஒருவன் இவ்வாறு தனது மொழி அனுபவத்தை பகிர்ந்து கொண்டார் " சிங்கள மொழி பெரியளவில் தெரியாவிட்டாலும் சிங்கள நண்பியிடம் ஏதோ ஒரு வகையில் அறை குறையாவது கதைக்கவும் வாய்ப்பு கிட்டியது. அவரது கணவன் மிக அன்பாக எனது குடும்பத்தை அனுசரித்தார். குடும்பத்துடன் சென்ற என்னை விருந்துபசாரம் வழங்கி அவர்களது மதவழிபாட்டு தளத்துக்கும் அழைத்து சென்றார் இது மிகவும் சந்தோசத்தை தந்தது" என்றார்.

இவ்வாறாக நாட்டின் ஏனைய மாவட்டங்களில் சிங்கள, தமிழ் மொழியை விசேடமாக களப் பயணம் ஊடாக கற்று அனுபவங்களை பகிர்வதன் மூலம் சிங்கள தமிழ் என்ற பாகுபாடு இன்றி ஒற்றுமையாக வாழ முடியும் என எதிர்பார்க்கலாம்.

மக்கள் மத்தியில் குழப்பமற்ற இனமத வாத போக்கற்ற நிலையின்றி வாழ்வதற்கு மொழி முக்கியமாக காணப்படுகிறது. எமது குழுவினரது களப் பயணம் ஊடாக பல அனுபவங்களை கற்க நேரிட்டது. குழுக் கலந்துரையாடல் மூலமாக நல்லுறவு பலப்படுத்தப்பட்டது. ஒரே பேரூந்தில் நாம் சென்று கண்டி ஊடகர்களுடனான மையக் குழு கலந்துரையாடல் ஊடாக அனுபவப் பகிர்வின் போது மேலும் சமூக நல்லிணக்கத்துக்கு வழி கோலியது. இவ்வாறான தமிழ் சிங்கள மொழியை அரச உத்தியோகத்தர்கள்,ஊடகர்களன்றி இளைஞர் யுவதிகள் சமூக மட்ட சிவில் அமைப்புக்களுக்கும் பயிற்சியை வழங்குவதன் மூலம் நாட்டில் சகவாழ்வினை கட்டியெழுப்ப முடியும்.

சிங்கள மக்கள் நம்மீது கொண்ட எண்ணங்கள் மொழியை கற்பதன் ஊடாக நாமும் சிங்கள மக்களின் உணர்வுகளை மதித்து செயற்பட முடியும் .எழுத்தாணி போன்ற அமைப்பு இதனுடன் மாத்திரம் நின்று விடாது மேலும் பல திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு வர வேண்டும். இவ்வாறான பல கற்றல் அனுபவங்கள் சமூக நல்லிணக்கத்துக்கு சிங்கள மொழி பெரும் பங்காற்றியுள்ளது.

ஓர் அனுபவ பகிர்வு.






# ரைசிங் சக்தி 2023 விநியோகத்தர் மாநாடு

"ரைசிங் சக்தி 2023 விநியோகத்தர் மாநாடு" அண்மையில் பத்தரமுல்லை, வோட்டர்ஸ் எட்ஜில் நடைபெற்றது.

இலங்கையின் மிக மோசமான பொருளாதார நெருக்கடி நிலை நிலவும் சூழலில், நாட்டை வளமான மற்றும் புதுமையான விவசாய எதிர்காலத்தை நோக்கி வழிநடத்துவதில் பங்களிப்பு வழங்கும் வகையில். சக்திமான் தமது அனைத்து தயாரிப்புகளையும் அனைத்து சர்வதேச தரங்களுடனும் அறிமுகம் செய்துள்ளது.

இந்திய விவசாயத்தை இயந்திரமயமாக்குவதில் "சக்திமான்" வர்த்தக நாமத்தின் தாய் நிறுவனமான *Tirth Agro Technology Private Limited* நிறுவனம், கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக முக்கிய பங்காற்றி வருகிறது.

1997 ஆம் ஆண்டு குஜராத்தின் ராஜ்கோட்டில் நிறுவப்பட்ட இந்நிறுவனம், இந்தியா முழுவதும் 850 விற்பனையாளர்கள், 64 விநியோகஸ்தர்கள் மற்றும் 105 உதிரி பாகங்கள் விநியோகஸ்தர்களை உள்ளடக்கிய பரந்த விற்பனை வலையமைப்பை கொண்டு செயற்படுகின்றது.

கடந்த தசாப்தத்தில், "சக்திமான்" இலங்கையில் விவசாயத்தை இயந்திரமயமாக்குவதில் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளதுடன், பண்ணை தொழில்நுட்பத்தின் புதிய சகாப்தத்தையும் அறிமுகப்படுத்தியது. அதிநவீன பண்ணை உபகரணங்களுக்கான எங்கள் அர்ப்பணிப்பு, நாட்டின் விவசாய இயந்திரத் தொழிலில் முன்னணியில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக உறுதியுடன் எங்களை வைத்துள்ளது.

எமது கரும்பு அறுவடை இயந்திரம் 3737-*Tejas* முதல் செயல் திறன் மிகு நெல் மாற்று இயந்திரம் வரை, எங்கள் தயாரிப்புகள் இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் உழைப்பு மிகுந்த சுமைகளைத் தணித்துள்ளன.

இந்த தீர்வுகள், முன்னோடி மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியமானவை என்பதுடன், விவசாயத்தின் பொருளாதார தாக்கத்தை மேம்படுத்தும் எங்கள் தொலைநோக்கு பார்வையுடனான சீரமைப்பிலும் சரியாக உள்ளன.

இந்தியாவின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு ஆதரவளிக்கும் எம் வாக்குறுதியானது எல்லைகளுக்கு அப்பாலும், குறிப்பாக இலங்கை வரைகூட நீண்டுள்ளது. இடைவிடாத ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலம், இலங்கையின் விவசாய நிலப்பரப்பை மாற்றியமைத்தது மட்டுமல்லாமல், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்கையும் உயர்த்துவதுடன், புதுமைகளின் மூலம் செழிப்பையும் ஏற்படுத்தியுள்ளோம்.

"ரைசிங் சக்தி 2023 விநியோகத்தர் மாநாடு" என்பது ஒரு நிகழ்வு மட்டுமல்ல: இது இலங்கையின் விவசாய செழுமைக்கான நமது உறுதிப்பாட்டின் அறிக்கையாகும். ஹெய்லிஸ் அக்ரிகல்ச்சர், ஓவர்சீஸ் ஆட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட், டிஎஸ்எல் ஹோல்டிங்ஸ் மற்றும் ஏஎம்டபிள்யூ போன்ற மதிப்புமிக்க பங்காளர்களுடன், இந்த மாநாடு நடைபெற்றது.

டயலொக் பாடசாலைகள் ரக்பி

# நொக்கவுட் போட்டிகள் ஆரம்பம்




டயலொக் பாடசாலைகள் ரக்பி நொக்கவுட் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. இப்போட்டிகளின் அரையிறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியனான இசிபத்தான கல்லூரி நேரடியாக தகுதி பெறும் வாய்ப்பினை பெற்றுள்ளது.

ஒகஸ்ட் 25ஆம் திகதி ஆரம்பமாகிய முதல் போட்டியில் டி.எஸ். சேனநாயக்க கல்லூரியும் சாஹிரா கல்லூரியும் மோதின. இப்போட்டி கொழும்பு ஹெவ்லொக் பார்க்கில் நடைபெற்றது. 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் புனித பேதுரு கல்லூரி முதல் தடவையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளதன் மூலம் நிறைவுற்ற டயலொக் பாடசாலைகளுக்கான ரக்பி லீக் முதல் சுற்றில் எந்தவொரு போட்டியிலும் தோல்வியடையாதிருந்த அணி என்ற பெருமையையும் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

இதேவேளை, இசிபத்தான கல்லூரி றோயல் கல்லூரியிடம் (22-17) என்ற கணக்கிலும், புனித பேதுரு கல்லூரியிடம் (28 -17) என்ற கணக்கிலும் தோல்விகளை தழுவியதன் காரணமாக தமது லீக் பட்டத்தை தக்க வைத்துக் கொள்ள தவறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அரையிறுதிப் போட்டிகள் செப்டெம்பர் மாதம் 2ஆம் மற்றும் 3ஆம் திகதிகளிலும், மாபெரும் இறுதிப் போட்டி செப்டம்பர் 10ஆம் திகதியன்றும் கொழும்பு ரோயல் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் நடைபெறும்.

போட்டிகளுக்கான பிரதான அனுசரணை வழங்குகின்ற, டயலொக் ஆசி ஆட்டா இப்போட்டிகளை thepapare.com, *Dialog VIU* மொபைல் *App* மூலம் நேரலையாக ஒளிபரப்ப ஏற்பாடுகளை செய்திருந்தது. மேலும், தற்போதைய மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள் மற்றும் ரக்பி அபிமானிகள் ஆகியோரின் நலன் கருதி *Dialog TV* அலைவரிசை 126 இலும் இப்போட்டிகள் நேரலையாக காண்பிக்கப்பட்டது.

2022 டயலொக் பாடசாலைகள் நொக்கவுட் சம்பியன்ஷிப்பில், இசிபத்தான கல்லூரி புனித சூசையப்பர் கல்லூரியை (49-22) வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதற்கமைய, நொக்கவுட் போட்டிகளில் 11 வெற்றிகளுடன் இசிபத்தான கல்லூரி அதிக வெற்றிகளையும், புனித பேதுரு கல்லூரி ஏழு வெற்றிகளையும், புனித தோமஸ் கல்லூரி ஐந்து வெற்றிகளையும் பெற்றுள்ளன.

டயலொக் ஆசிஆட்டா தேசிய கரப்பந்து, வலைப்பந்து மற்றும் ஈஸ்போர்ட்ஸ் அணிகளுக்கான பெருமைமிகு அனுசரணையாளராக செயற்பட்டு வருவதுடன், ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டம், தேசிய கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வலைப்பந்து போட்டிகள், இலங்கை திறந்த கொல்ஃப் மற்றும் பராலிம்பிக், இராணுவ பரா விளையாட்டுகள், தேசிய பரா விளையாட்டுகள் உட்பட உலக பரா விளையாட்டுகளில் கலந்து கொள்ளும் இலங்கை அணி ஆகிய அனைத்திற்கும் அனுசரணை வழங்கி நெருங்கிய தொடர்பை பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆந்திர மாநிலம்

# உண்டியலில் 100 கோடி கணக்கில் 17 ரூபாய்

ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினம் அருகே சிம்மாசலம் அப்பாண்ணா வராஹ லட்சுமி நரசிம்ம சுவாமி கோயில் உள்ளது. இந்த கோயிலில் 15 நாட்களுக்கு ஒருமுறை உண்டியல் காணிக்கை எண்ணப்படும்.

உண்டியல் காணிக்கை எண்ணும் போது வங்கியின் காசோலை ஒன்று உண்டியலில் கிடந்துள்ளது. இதை எடுத்து பிரித்து பார்த்ததில் 100 கோடி ரூபாய் கோயில் பெயரில் காணிக்கையாக எழுதப்பட்டிருந்தது.



இது தொடர்பாக கோவில் ஊழியர்கள் அந்தக் கோவிலின் செயல் அலுவலருக்கு தகவல் கொடுத்தனர். அவர் அந்த காசோலையை எடுத்துக் கொண்டு வங்கி கிளைக்குச் சென்றுள்ளனர்.

வங்கியில் காசோலையை கொடுத்து சோதனை செய்த போது அந்த காசோலைக்கு சொந்தமான வாடிக்கையாளரின் கணக்கில் வெறும் 17 ரூபாய் மட்டுமே இருந்துள்ளது. வராக லட்சுமி நரசிம்ம தேவஸ்தானம் என்ற பெயரில் எழுதப்பட்டிருந்த அந்த காசோலையில் முதலில் 10 ரூபாய் என்று எழுதிவிட்டு, பிறகு அதை அழித்து 100 கோடி ரூபாய் என்று எழுதப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

சவுதி அரேபியா

# மாணவர்கள் விடுமுறை எடுத்தால் பெற்றோருக்கு சிறை

முறையான காரணம் இன்றி மாணவர்கள் பாடசாலைக்கு வராமல் விடுமுறை எடுத்தால் பெற்றோருக்கு சிறை தண்டனை வழங்கப்படும் என்று சவுதி அரேபியாவில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வருகை விதிகளை அந்நாட்டின் அரசு கடுமையாக்கி உள்ளது.

சவுதி அரேபியாவில், மாணவர் ஒருவர் பாடசாலைக்கு எந்த காரணமும் இல்லாமல் 20 நாட்கள் வராமல் இருந்தால் அவரது பெற்றோருக்கு சிறை தண்டனை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு மாணவர் 20 நாட்களுக்கு பள்ளிக்கு வரவில்லை என்றால் அவரது



பெற்றோர் அல்லது பாதுகாவலரை அரசு வழக்கறிஞர் அலுவலகத்துக்கு அனுப்புவது பள்ளியின் பொறுப்பாகும்.

அந்த அலுவலகம் விசாரித்து பின்னர் வழக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பும். பெற்றோர் அலட்சியத்தால் மாணவர் பள்ளிக்கு வராதது நிரூபிக்கப்பட்டால் பெற்றோருக்கு சிறைத்தண்டனை விதிக்க நீதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இது குழந்தைகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதில் ஒரு மாணவர் 3 நாட்கள் விடுமுறை எடுத்தால் முதல் எச்சரிக்கையும் 5 நாட்கள் விடுமுறை எடுத்தால் 2-வது எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு பெற்றோருக்கு தெரியப்படுத்தப்படும் 10 நாட்கள் விடுமுறைக்கு பிறகு 3-வது எச்சரிக்கை அளித்து பெற்றோர் வரவழைக்கப்பட்டு உறுதி மொழியில் கையெழுத்திட வேண்டும். 15 நாட்களுக்கு வரவில்லையென்றால் அந்தமாணவர் கல்வித்துறை மூலம் வேறு பள்ளிக்கு மாற்றப்படுவார். 20 நாட்கள் வராத பிறகு கல்வித்துறை சட்ட நடவடிக்கையை தொடங்கும் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.




## ஒகஸ்ட் 23 தேசிய விண்வெளி தினம்

சந்திரயான்-3 நிலவில் தரையிறங்கிய நாளான ஒகஸ்ட் 23 ஆம் திகதியை தேசிய விண்வெளி நாளாக கொண்டாடப்படும் என்று பிரதமர் மோடி, அறிவித்துள்ளார். மேலும் சந்திரயான்-2 திட்டத்தில் ரோவர் விழுந்த இடத்தை திரங்கா பாயின்ட் என்று பெயர் சூட்ட இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். சந்திரயான்-3 நிலவில் தரையிறங்கிய இடத்துக்கு சிவசக்தி என்று பெயரிடவும் பரிந்துரைக்கப்பட்டது.

## சூரியனை ஆராய ஆதித்யாவை அனுப்ப முடிவு

சந்திராயன்-3 திட்டம் வெற்றி பெற்றுள்ள நிலையில், சூரியனை பற்றிய ஆய்வுக்காக ஆதித்யா-எல்1 செயற்கைக்கோளை, பிஎஸ்எல்வி- எக்ஸ்எல் (சி57) ராக்கெட் மூலம் செப்டம்பர் 2-ம் திகதி விண்ணுக்கு அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

பூமியிலிருந்து 15 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எல்-1 என்று அழைக்கப்படும் சூரியனின் ஒளிவட்டபாதையில் ஆதித்யா-எல்1 செயற்கைக்கோள் நிலை



நிறுத்தப்படும். சூரியனை பற்றிய ஆய்வுக்காக, இஸ்ரோ மேற்கொள்ளும் முதல் விண்வெளி திட்டம் இது. ஆதித்யா-எல்1 என்ற இந்த செயற்கைக்கோள், விண்வெளியில் இருக்கக் கூடிய ஒரு ஆய்வுக் கூடமாக செயல்படவுள்ளது.

## ஜனாதிபதி எம்மர்சன் மீண்டும் வெற்றி

ஜிம்பா



ஆப்பிரிக்க நாடான ஜிம்பாப்வேவில் ஜனாதிபதி எம்மர்சன் மங்கக்வா தலைமையிலான ஆட்சி நடந்து வருகிறது. அங்கு ஜனாதிபதி தேர்தல் கடந்த 23, 24-ந் திகதிகளில் நடந்தது. இதில் ஜனாதிபதி எம்மர்சன் மங்கக்வா, எதிர்க்கட்சித் தலைவர் நெல்சன் சமிசா ஆகியோர் இடையே கடும் போட்டி நிலவியது.

தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணப்பட்டு வந்த நிலையில் முடிவுகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. இதில் ஜனாதிபதி எம்மர்சன் மங்கக்வா 52.6 சதவீத வாக்குகள் பெற்று உள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. பிரதான எதிர்க்கட்சி தலைவரான நெல்சன் சமிசா 44 சதவீத வாக்குகளை பெற்றுள்ளார். இதன் மூலம் ஜனாதிபதி எம்மர்சன் மங்கக்வா மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்துள்ளார்.

அமெரிக்கா

## கறுப்பினத்தவர்கள் மீது துப்பாக்கி சூடு மூவர் பலி

அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் ஜாக்சன் வெலி பகுதியில் கறுப்பினத்தவர்கள் அதிகம் வசித்து வருகிறார்கள். இந் நிலையில் அந்த பகுதியில் உள்ள ஒரு கடைக்குள் வெள்ளை இனத்தவர் ஒருவர் துப்பாக்கியுடன் நுழைந்து கறுப்பினத்தவர்களை குறி வைத்து சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தியுள்ளார். இந்த தாக்குதலில் ஒரு பெண் உள்பட 3 கறுப்பினத்தவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் ஆப்பிரிக்க-அமெரிக்க வம்சாவளியை சேர்ந்தவர்கள் ஆவர். தாக்குதல் குறித்து தகவல் அறிந்ததும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து கடைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியவரை பிடிக்க முயற்சித்தனர்.



அப்போது துப்பாக்கி சூடு நடத்தியவர் தன்னை தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். மேலும் இனவெறி காரணமாக அவர் இந்த தாக்குதலை நடத்தியதாகவும் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியில் இனவெறி வாசகங்கள் எழுதப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சந்திரயான்-3 வெற்றியை பாராட்டிய பாக். தொகுப்பாளர்கள்

இந்தியா, கடந்த 23-ந் திகதி நிலவின் தென்துருவத்தில் இறங்கி வரலாறு படைத்தது. இதன்மூலம் உலக நாடுகளின் கவனம் இந்தியாவின் பக்கம் திரும்பி உள்ளது. தற்போது இந்தியாவின் சந்திரயான்-3 சாதனைக்கு உலகம் முழுவதிலும் இருந்து பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் பாகிஸ்தானைச் சேர்ந்த ஹுமா அமீர் ஷா மற்றும்




அப்துல்லா சுல்தான் ஆகிய தொலைக்காட்சி தொகுப்பாளர்கள் இருவரும், சந்திரயான்-3 வெற்றியை வெகுவாக பாராட்டி உள்ளனர். இது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது

இதுகுறித்து பேசிய அவர்கள், “இந்தியா நிலாவிற்கு சென்று சாதித்துள்ள அதேவேளையில் நாம் இங்கு மாட்டிக் கொண்டுள்ளோம். நாம் நமக்குள்ளேயே பரபரப்பாக சண்டையிட்டு கொண்டிருக்கிறோம். இங்கிருந்து சந்திரயான்-3 வெற்றியைப் பார்ப்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.” என்றனர்.

கடற்கரை கால்பந்தாட்டத் தொடர்:

## வெற்றிவாகை சூடிய கல்முனை அல் அஸ்ஹர்

■ எம்.எம். ஜெஸ்மின்

கடற்கரை கால்பந்தாட்டத் தொடரின் 12 வயதுக்குட்பட்ட பிரிவில் கல்முனை அல் அஸ்ஹர் விளையாட்டுக் கழகம் சம்பியனாக முடிசூடியது.

நான்கு அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில்



ஸுரைப் ஹம்தி புகுத்திய அபார கோலால் அல் அஸ்ஹர் சம்பியனாக வெற்றிவாகை சூடியிருந்தது.

கட்டார் தேசிய கிரிக்கெட் அணிக்கு தெரிவாகிய

## முஹம்மட் அஹ்னாபுக்கு ஹரீஸ் எம்.பி வாழ்த்து

■ நூருல் ஹுதா உமர்

கல்முனை சாஹிரா தேசியக் கல்லூரி, கல்முனை அல் அஸ்ஹர் வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவனும், கல்முனை பிராந்திய முன்னணி கழகங்களில் ஒன்றான லெஜன்ட்ஸ் விளையாட்டுக் கழக முன்னணி வீரர்களில் ஒருவராகவும், திறமையை வெளிக்காட்டிய முஹம்மட் அஹ்னாப் கட்டார் தேசிய கிரிக்கெட் அணிக்காக விளையாட தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது இலங்கைவாழ் சகலருக்கும் மகிழ்ச்சியளிக்கும் செய்தியாக அமைந்துள்ளது என எச்.எம்.எம். ஹரீஸ் எம்.பி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தான் பிரதிநிதித்துவப்படுத்திய கழகங்களின் பல்வேறு வெற்றிகளுக்கு காரணமாக அமைந்திருந்து சிறந்த



வீரராக திகழ்ந்த இவர் கடின உழைப்பால் இந்த நிலையை அடைந்துள்ளார் இவர் மாவட்ட, மாகாண மட்டங்கள், மற்றும் தேசியத் தெரிவுகளில் முதன்மை காட்டி, கொழும்பு சாஹிரா கல்லூரி, கொழும்பு மூர்ஸ் அணி, கட்டார் உள்ளக அணி என பலபோட்டிகளிலும் போராடி தனது திறமைகளை காட்டிய சிறந்த கிரிக்கெட் வீரர் என்பதை அறியும் போது மகிழ்ச்சியளிக்கிறது என்றும் ஹரிஸ் குறிப்பிட்டுள்ளார்.




ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில்

# ஆப்கானிஸ்தானை வெள்ளையடித்த பாகிஸ்தான்

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் ஆப்கானிஸ்தானை பாகிஸ்தான் வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே வென்றிருந்த பாகிஸ்தான், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என ஆப்கானிஸ்தானை பாகிஸ்தான் வெள்ளையடித்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 268/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் 67 (79), பாபர் றிஸ்வான் 60 (86), அக்ஹா சல்மான் 38 (31), மொஹமட் நவாஸ் 30 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: குல்படின் நைப் 2/36, பரீட் அஹ்மட் 2/70, ரஷீட் கான் 1/42, பஸல்ஹக் பரூக்கி 1/45, முஜீப் உர் ரஹ்மான் 1/50)

ஆப்கானிஸ்தான்: 209/10 (48.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: முஜீப் உர் ரஹ்மான் 64 (37), ஷஹிடுல்லாஹ் 37 (65), றியாஸ் ஹஸன் 34 (66) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷடாப் கான் 3/42, ஷகீன் ஷா அஃப்ரிடி 2/31, பஹீம் அஷ்ரஃப் 2/43, மொஹமட் நவாஸ் 2/45, அக்ஹா சல்மான் 1/3)

போட்டியின் நாயகன்: மொஹமட் றிஸ்வான்

தொடரின் நாயகன்: இமாம்-உல்-ஹக்



சிநேகபூர்வப் போட்டியில்

## உயர்தர மாணவர் அணி வெற்றி

■ எம்.எஸ்.எம். ஸாகிர்

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர்களுடனான இஸ்லாமாபாத் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் வித்தியாலய உயர்தர மாணவர் வென்றனர்.



கலப்பு கரப்பந்தாட்டத் தொடரில்

## சம்பியனானது குருக்கள்மடம் இளைஞர் கழக அணி

■ அஸ்ஹர் இப்றாஹிம்

சர்வதேச இளைஞர் தினத்தையொட்டி இளைஞர் கழகங்களுக்கிடையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஆண்,பெண் இருபாலாருக்குமான கலப்பு கரப்பந்தாட்டத் தொடரில் குருக்கள்மடம் இளைஞர் கழகம் சம்பியனானது.

இத்தொடரில் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மூன்று இளைஞர் கழகங்களும், ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மூன்று இளைஞர் கழகங்களுமாக மொத்தம் ஆறு இளைஞர் கழக அணிகள் பங்கேற்ற நிலையில் இறுதிப் போட்டியில் களுதாவளை இளைஞர் கழக அணியை வென்றே குருக்கள்மடம் இளைஞர் கழக அணி சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 28 ஒகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.